# தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவம்

எண்.100 அண்ணா சாலை, கிண்டி, சென்னை–600 032.

தொலைபேசி: 044–22201337

மின்னஞ்சல் முகவரி: ombudsmanlocal@tn.gov.in


தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர், சென்னை–600 032

முன்னிலை: முனைவர் சோ. அய்யர், இ.ஆ.ப. (ஓ).

முறையீட்டு மனு எண்: 092/2016/பேரூராட்சி

ஆணை எண்: 137/2017

நாள்: 31/05/2017

திருமதி. க. ஈஸ்வரி சுந்தரமூர்த்தி,
69, நாடார் தெரு,
5-வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
வத்திராயிருப்பு பேரூராட்சி,
விருதுநகர் மாவட்டம். – முறையீட்டு மனுதாரர்

பேரூராட்சித் தலைவர்,
வத்திராயிருப்பு பேரூராட்சி,
வத்திராயிருப்பு, விருதுநகர் மாவட்டம்,
மற்றும் பலர் – எதிர் மனுதாரர்கள்

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு பேரூராட்சியைச் சேர்ந்த திருமதி க. ஈஸ்வரி சுந்தர மூர்த்தி என்பவரின் 14.1.2016 நாளிட்ட மனு பேரூராட்சிகளின் இயக்குநர் கடிதம் ந.க.எண்.765/2016/இ2 நாள்:4/2/2016 வாயிலாகவும் மற்றும் உரிய படிவத்தில் அனுப்பப்பட்ட 02.05.2016 நாளிட்ட முறையீட்டு மனு ஆகியவை இம்முறைமன்ற நடுவத்தில் பெறப்பட்டு 092/TPT/2016 என்ற எண்ணிட்ட முறையீட்டு மனுவாகப் பதிவு செய்யப்பட்டு, கீழ்க்கண்டவாறு ஆணையிடப்படுகிறது:-

## ஆணை

விருதுநகர் மாவட்டம் வத்திராயிருப்பு பேரூராட்சியைச் சேர்ந்த திருமதி. க. ஈஸ்வரி சுந்தரமூர்த்தி தனது முறையீட்டு மனுவில், 14.01.2016 அன்று நடைபெற்ற பேரூராட்சி மன்ற கூட்டத்தில் பொருள் எண்.5ல், குடிதண்ணீர் குழாய் பணம் கட்டாத இணைப்புகளை 15

நாட்களில் துண்டித்து துண்டிக்கப்படும் இணைப்புகளை வேறு நபர்களுக்கு இணைப்பு வழங்கும் முறைகேடாக பணம் பெறும் நோக்கத்துடன் இயற்றப்பட்ட தீர்மானத்தினை ரத்து செய்ய வேண்டுமெனவும், பொருள் எண்.9ல் நாடார் பஜாரில், சட்டமன்ற உறுப்பினர் தொகுதி வளர்ச்சி நிதியில் நிழல்குடை கட்ட தீர்மானம் வைக்கப்பட்டுள்ளதை மாற்றி வணிக வளாகம் அருகே நிழற்குடை கட்ட வேண்டுமெனவும், பொருள் எண்.13ல் சொத்துவரி பதிவு புத்தகம் அச்சிட்டதில் பெருமளவு ஊழல் நடந்துள்ளதாகவும், இதற்கு உடன் நடவடிக்கை எடுத்திடவும், பொருள் எண்கள் 18,19,20 & 21ல், சட்ட விரோதமாக வார்டு எண். 18, 13, 14, 2, 12, மற்றும் 3 ஆகிய பகுதிகளுக்கு மட்டும் ரூ.70 இலட்சம் செலவில் வேலைகள் செய்ய தீர்மானம் வைக்கப்பட்டுள்ளதாகவும் முன்னரே அந்த வார்டுகளில் ரூ.4 கோடி வரை வேலைகள் நடைபெற்றுள்ளது எனவும், சிலர வேலை நடைபெறாததால் மீண்டும் மீண்டும் வேலை போடப்பட்டு செய்யப்படுவதாகவும் தெரிவித்துள்ளார். மேலும் பொருள் எண்.24ல் செலவுச் சீட்டு வவுச்சர் பில்களில் பெருமளவு ஊழல் நடந்துள்ளதாகவும் நடவடிக்கை எடுத்திடவும் முறையீட்டு மனுதாரர் முறையிட்டுள்ளார்.

2. முறையீட்டு மனுதாரர் இம்முறைமன்ற நடுவ அழைப்பாணை அ.ம.92/2016, நாள்:28.3.2016 வாயிலாக 29.4.2016 அன்று விசாரணைக்கு அழைக்கப்பட்டார். மேற்படி விசாரணையின் போது முறையீட்டு மனுதாரர் மேற்படி முறையீடுகள் குறித்தும், மேலும், பேரூராட்சி மன்ற உறுப்பினர் என்ற நிலையில் தனக்கு 45 மாதங்களாக அமர்வு படி ரூ.300/- வழங்கவில்லை என்றும் தெரிவித்தார்.

3. மேற்படி முறையீடு குறித்து இம்முறைமன்ற நடுவ அறிவிப்பாணை எண்.92/2016 நாள்:15.2.2016 வாயிலாக செயல் அலுவலரிடம் அறிக்கை கோரப்பட்டது அதன்படி செயல் அலுவலர், தனது கடித ந.க.எண்.47/2016/அ1 /நாள்: 21.3.2016ல் குடிநீர் இணைப்பு தொடர்பாக உரிய நடவடிக்கை மேற்கொள்வதற்காக தீர்மானம் எண்.306/நாள்: 14.01.2016ல் தொகை செலுத்தாத இணைப்புகளை கணக்கிட்டு உரிய வழிமுறையை பின்பற்றி இணைப்பு வழங்க நடவடிக்கை எடுக்கும் தீர்மானம் அங்கீகரிக்கப்பட்டது எனவும், பேருந்து நிழற்குடை அமைப்பதில் மனுதாரர் ஆட்சேபனை செய்ததால் சட்டமன்ற உறுப்பினர், பேருந்து நிழற்குடை அமைப்பதையும் அதற்காக நிதி ஒதுக்கீடு செய்ததையும், சட்டமன்ற உறுப்பினர் ரத்து செய்துவிட்டதாகவும், குடிநீர் கட்டணம் மற்றும் தொழில் வரி கேட்பு புத்தகம் இலவசமாக வழங்க மன்றம் அங்கீகரித்துள்ளது எனவும், இது தொடர்பாக பேரூராட்சி உதவி இயக்குநரிடம் மேலொப்பம் பெறப்பட்டுள்ளது எனவும் தெரிவித்துள்ளார். திட்டப் பணிகளுக்கான ஒப்பந்த புள்ளிகள் உரிய விதிமுறைகளின்படி செய்யப்பட்டது எனவும், செலவுச் சீட்டுகள் அனைத்தும் மன்றம் அங்கீகரித்து அனுமதித்துள்ளது எனவும் மனுதாரரின் புகார் உண்மைக்கு புறம்பானது என செயல் அலுவலர் தெரிவித்துள்ளார்.

4. முறையீட்டு மனுவில் குறிப்பிடப்பட்டுள்ள புகார்கள் அனைத்தும் ஆதாரமின்றி கூறப்பட்டதாக செயல் அலுவலரால் தெரிவித்துள்ளதால், ஆவணங்களை கூர்ந்தாய்வு செய்தும் விரிவான அறிக்கையினை முறைமன்ற நடுவத்திற்கு சமர்ப்பித்திட பேரூராட்சி உதவி இயக்குநருக்கு ஆணையிடப்பட்டது. அதன்படி பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது 6.9.2016 மற்றும் 21.10.2016 நாளிட்ட அறிக்கையில், 14.1.2016–ஆம் தேதி நடைபெற்ற மன்றக் கூட்டத்தில் பொருள் எண்.5ல் தீர்மானம் எண்.306ல் அங்கீகரிக்கப்பட்டு, புதிய குடிநீர் இணைப்பு வேண்டுவோர்களுக்கு வழங்க நடவடிக்கை மேற்கொள்ளப்படுகிறது எனவும், மனுதாரர் குறிப்பிட்டுள்ளது போல், பணத்தை பெற்றுக்கொண்டு நடவடிக்கை எடுக்கவில்லை என தெரிவித்துள்ளார். பயனியர் நிழற்குடை அமைப்பதில் ஆட்சேபனை செய்ததன் அடிப்படையில் மாற்று இடத்தில் கட்ட இயலாததால், நிழற்குடை பணி ஆணை ரத்து செய்துவிட்டார்கள் எனத் தெரிவித்துள்ளார். வரி நிலுவை நடப்பு கேட்பு பதிவு புத்தகம் விதிமுறைகளின்படி தமிழ்நாடு அரசு சார்ந்த கோஆப்ரேடிவ் சொசைட்டி என்ற நிறுவனத்தில் மன்றம் அங்கீகரித்து அச்சடித்து பொது மக்களுக்கு இலவசமாக வழங்கப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார்.

5. திடக்கழிவு மேலாண்மை பணி வேலைகளுக்கு மன்றம் அங்கீகரித்து, உரிய விதிமுறைகளின்படி ஒப்பந்தப் புள்ளி கோரப்பட்டு, பணிகள் நடைபெறுகிறது எனவும், எவ்வித முறைகேடுகளும் நடைபெறவில்லை எனவும், பொருள் எண்.18,19,20,21 ஆகியவற்றில் பொது நிதியில் 69.80 இலட்சத்திற்கு 8 அபிவிருத்தி பணிகள் தேர்வு செய்து, தல ஆய்வு செய்யப்பட்டு நிர்வாக அனுமதி பெறப்பட்டுள்ளதாக தெரிவித்துள்ளார். இந்த அபிவிருத்திப் பணி சம்பந்தமாக WP (MD) No.2314/16ல் மனுதாரரால் தொடரப்பட்ட வழக்கில் உறுத்துக் கட்டளை ஏதும் இல்லாததால், அரசு வழக்கறிஞரின் ஆணைப்படி பணி ஆணை வழங்கி பணிகள் நடைபெற்று வருகிறது எனவும் தெரிவித்துள்ளார்.

6. பொருள் எண்.24ல் செலவுச் சீட்டுகள் பரிசீலனை செய்யப்பட்டு அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும் மனுதாரர் வேண்டுமென்றே திட்டமிட்டு உண்மைக்கு புறம்பான புகாரினையும் பேரூராட்சி நிர்வாகத்திற்கு எதிரான புகாரினையும் செய்வதையே வாடிக்கையாக செய்து வருகிறார் எனத் தெரிவித்துள்ளார். பசுமை வீடுகள் பயனாளிகள் பட்டியல் மாவட்ட ஆட்சித் தலைவர் தலைமையிலான கண்காணிப்புக்குழு அங்கீகரித்து அரசாணையில் குறிப்பிடப்பட்ட விதிமுறைகளின்படியே பயனாளிகள் தேர்வு செய்யப்பட்டுள்ளனர் எனவும், மதுரை மண்டல பேரூராட்சி உதவி இயக்குநர் தெரிவித்துள்ளார்.

7. பேரூராட்சிகளின் உதவி இயக்குநர் தனது அறிக்கைக்கு சான்றாவணங்களாக (1) மன்ற தீர்மானம் அங்கீகரித்தமை (2) மார்ச் 16 முதல் மே 16 முடிய உள்ள செலவுச் சீட்டுகளுக்கு மன்ற அங்கீகாரம் வழங்கியது மற்றும் குடிநீர் கட்டண கேட்பு 2011-12 முதல் 2016-17 வரை குடிநீர் இணைப்பு 1567 ஆக உள்ளதாக சான்றளிப்பு ஆகிய ஆவணங்களை ஆதாரமாகவும், குடிநீர்

கட்டணம் செலுத்தாததால் குடிநீர் இணைப்பு துண்டிக்கப்படவில்லை எனவும், நிலுவைகளை வசூலிக்கும் நோக்கிலேயே குடிநீர் கட்டணம் செலுத்தாவிடில் இணைப்பினை துண்டிப்பு செய்வதற்கு பேரூராட்சி மன்ற தீர்மானத்தில் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்றும் தெரிவித்துள்ளார்.

8. 29.04.2016 அன்று நடைபெற்ற விசாரணையின் போது மனுதாரர் தனது கூட்ட அமர்வுபடி வழங்கவில்லை என தனது வாக்குமூலத்தில் தெரிவித்துள்ள புகார் குறித்து செயல் அலுவலர் தனது 16.05.2017 நாளிட்ட விளக்க அறிக்கையில், மனுதாரர் 09.11.2011 முதல் 25.10.2016 வரை நடைபெற்ற மொத்த 46 கூட்டங்களில் மனுதாரர் ஆஜரான 22 கூட்டங்களுக்கு அமர்வு படி ரூ.300/-வீதம் 10 கூட்டங்களுக்கு கூட்ட அமர்வுபடி வழங்கும் பதிவேட்டின் மூலமாக ரூ.3000/- பெறப்பட்டுள்ளார் என்றும், மற்றும் 12 கூட்டங்களுக்கு வங்கி காசோலை எண்.2071365/4.5.16ன் படி, ரூ.3600/- மனுதாரருக்கு அமர்வுபடி வழங்கப்பட்டு வங்கியிலிருந்து மனுதாரர் காசோலைக்குரிய தொகையை பெற்றுக்கொண்டுள்ளார் என்றும் தெரிவித்துள்ளார்.

9. மனுதாரர் புகார் மனு, சாட்சியங்கள், தொடர்புடைய அறிக்கைகள் இம்முறைமன்ற நடுவத்தில் மிகக் கவனமுடன் பரிசீலிக்கப்பட்டதில் முறையீட்டு மனுதாரர் குடிநீர் துண்டிப்பு செய்யப்பட்டதற்கான யாதொரு ஆதாரத்தினையும் சமர்ப்பிக்கவில்லை. சொத்து வரி விதிப்பு புத்தகம் அச்சிட்டதில் ஊழல் என்ற புகார் சம்பந்தமாக தமிழ்நாடு அரசு சார்ந்த கோ ஆப்ரேடிவ் சொசைட்டி என்ற நிறுவனத்திற்கு உரிய விதிமுறைகளின்படி அச்சடிப்பு பணி வழங்கப்பட்டு உரிய தொகை வழங்கப்பட்டுள்ளது என்றும் பொருள் எண்.19, 20 மற்றும் 21 குறித்து உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடர்ந்து உறுத்துக் கட்டளை பெறாத நிலையில் திட்டப் பணிகள் மேற்கொள்ளப்பட்டுள்ளது என அறியப்படுகிறது. செலவுச் சீட்டுகள் மன்றத்தினால் அங்கீகரிக்கப்பட்டுள்ளது என்பதும் அறியப்படுகிறது. முறையீட்டு மனுதாரருக்கு கூட்ட அமர்வுப்படி வழங்கப்பட்டுள்ளது என்பது செயல் அலுவலர் அறிக்கை வாயிலாக உறுதியாகிறது.

10. மேற்கூறிய நிலையில் மனுதாரர் தனது மனுவில் கூறப்பட்டுள்ள புகார்கட்கு நிரூபிக்கும் வகையில் உரிய ஆதாரங்கள் மனுதாரரால் சமர்ப்பிக்காத நிலையில் முறையீட்டு மனுதாரரின் மனுவினை தள்ளுபடி செய்யலாம் எனக் கருதி அவ்வாறே ஆணையிடப்படுகிறது.

2017-ஆம் ஆண்டு மே திங்கள் 31-ஆம் நாளன்று என்னால் கையொப்பமிடப்பட்டு அலுவலக முத்திரையிடப்பட்டு இவ்வாணையிடப்படுகிறது.

—//ஒப்பம்//—
தமிழ்நாடு உள்ளாட்சி அமைப்புகள் முறைமன்ற நடுவர்

/ஆணைப்படி அனுப்பப்படுகிறது/

செயலாளர். 7/6/17

3/6/17

பெறுநர்

1. திருமதி. க. ஈஸ்வரி சுந்தரமூர்த்தி,
   69, நாடார் தெரு,
   5-வது வார்டு முன்னாள் உறுப்பினர்,
   வத்திராயிருப்பு பேரூராட்சி,
   விருதுநகர் மாவட்டம்.

2. பேரூராட்சித் தலைவர்,
   வத்திராயிருப்பு பேரூராட்சி,
   வத்திராயிருப்பு, விருதுநகர் மாவட்டம்.

3. செயல் அலுவலர்,
   வத்திராயிருப்பு பேரூராட்சி,
   வத்திராயிருப்பு, விருதுநகர் மாவட்டம்.